தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூன் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 16, 17, 18, 19 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது வினா எண் 20 எடுத்துக்கொள்ளப்படும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

***20 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தைப் பிரிக்கின்ற பிரச்னை, நம்முடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், ஆலோசனையில் இருந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள். அப்படி ஏதேனும் ஆலோசனையில் இருந்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாவட்டங்களைப் பிரிக்கின்ற சிந்தனை தற்சமயம் இல்லை என்றுதான் சொன்னேன். மற்ற குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, அரக்கோணம் வட்டத்தைக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சேர்ப்பதாக முன்பு சொல்லிக் கொண்டிருந்தது, இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: இது அங்கத்தினரவர்கள் சொல்லுகின்ற புது யோசனை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வட்டத்தை ஒரு தனி மாவட்டமாகவும், வடார்க்காடு மாவட்டத்திலுள்ள வேறு பகுதிகளை ஒரு தனி மாவட்டமாகவும் பிரித்தால் நிர்வாகத்திற்குச் சாதகமாக இருக்கும் என்று அரசு நினைக்கின்றதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்சமயம் அப்படிப் பிரிக்கின்ற யோசனை இல்லை என்றுதான் சொன்னேன்.

திரு. துரைமுருகன் : மாவட்டங்களின் அடிப்படையில் தான் மத்திய சர்க்கார் சில மானியங்களைத் தருவதாக சமீபத்தில் முதல்வர் அவர்கள்கூட, இந்த நிதிநிலை அறிக்கையைக் கொடுக்கின்றபோது தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய தமிழ் நாட்டில்கூட, வடார்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களை இரண்டிரண்டாகப் பிரிப்பதன் மூலம் மத்திய சர்க்காரிடமிருந்து அதிக நிதியை நாம் பெற வழி செய்யாதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த சிறு மானியத்தை எதிர்பார்த்து, பெரும் செலவை ஏற்றுக்கொள்ள அரசு தயாராயில்லை.

திரு. சு. துரைசாமி : பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரிப்பதனால் நிர்வாக சௌகரியம் ஏற்படும். ஆகவே, அரசாங்கம் இனிமேலாவது விரைவில் மாவட்டங்களைப் பிரிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்சமயம் இல்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாவட்டங்களெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பு பிரிக்கப்பட்டவை. நாளாவட்டத்தில் இப்பொழுது தாலுக்காக்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. வடார்க்காடு மாவட்டத்திலேகூட சில தாலுக்காக்களை இரண்டாக இப்பொழுது பிரித்திருக்கிறோம். அந்த அடிப்படையில், பரந்து கிடக்கும் வடார்க்காடு மாவட்டத்தை, இப்பொழுது இல்லாவிட்டாலும் ஐந்தாண்டுக் காலத்திலாவது, பிரிக்க ஏதாவது உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது மாவட்ட ஆட்சி அலுவலங்களில் அதிகாரிகளை நிறையப் போட்டிருக்கிறோம். டி.ஆர்.ஓ. என்று தனி அதிகாரியைப் போட்டு வேலைகளைப் பிரித்து வைத்திருக்கிறோம். அபிவிருத்திக்கென்று தனித் தனி மாவட்டங்களாகப் பிரித்து இருக்கிறோம். வட வேலூர், தென் வேலூர் என்று பிரித்து, வேலூரிலும் திருவண்ணாமலையிலும் செயல்படுகின்றன. எனவே, அதில் ஒன்றும் சங்கடம் இல்லை. தற்சமயம் மாவட்டங்களைப் பிரிக்கின்ற யோசனை இல்லை.

1971 ஜூன் 22]

இது நிர்வாக வசதியைப் பொருத்து மட்டுமல்ல, பணத்தைப் பொருத்ததாகவும் இருக்கிறது. அத்தகைய செலவை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுவதற்கு அரசு தயாராயில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சென்ஸஸ் ஆபரேஷன் முடிந்தவுடனே மாவட்டங்களைப் பிரிக்கவேண்டும் என்று யோசனை முன்பு கூறப்பட்டது. அந்த யோசனையை மறு முறையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : When the **district of** Salem was bifurcated, the districts of Coimbatore and North Arcot also ought to have been bifurcated. Somehow they were left out. Considering the largeness of these two districts, will the Hon. Minister for Revenue be pleased to consider to bifurcate them and form more handy districts?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தருமபுரி பிரிந்ததால் ஏற்பட்ட விளைவினால்தான்—அதில் ஏற்பட்ட பணச் செலவைப் பார்த்த பிறகுதான்—இனிமேல் மேற்கொண்டு பிரிப்பதைப்பற்றி அரசு தயக்கம் காட்ட வேண்டியிருக்கிறது.

சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கல்

*** 21 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளைத் தேசியமயமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : கரும்பாலைகளினுடைய செஸ் நிதியிலிருந்து அந்தக் கரும்பாலை சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குப் பாதைகள் செப்பனிட போன்ற செலவுகளுக்காகப் பணம் ஒதுக்குகிறார்கள். பல்வேறு திட்டங்களை முறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலும் அந்த செஸ் நிதியிலிருந்து வேலைகள் எதுவும் எடுத்துக்கொண்டு செயல்படுவதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி இனிமேலாவது அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, தேசியமயமாக்குவது பற்றியது.

DR. H. V. HANDE : Sir, may I know whether the Government have examined all the different aspects of the sugar industry? Is it not a fact that large quantities of sugar are lying idle and whether it is because of the Central Government's policy? What is the Government going to do about these large stocks? will the Hon. Minister enlighten this House?